SPM 2020

# எஸ்.பி.எம் தமிழ்மொழி இலக்கணம்

## பயிற்றி 2

புனிதாம்பிகை செல்வராஜு

பகாங் மாநில இடைநிலைப்பள்ளித் தமிழாசிரியர் கழகம்

## பயிற்சி 1

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

அ) கீழ்க்காணும் சொற்குவியலில் **உயிர்த்தொடர்க் குற்றியலுகர சொற்களை** மட்டும் தெரிவு செய்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| **எருது** | **மாது** | **பண்பு** | **உலகு** | |
| **காற்று** | **காசு** | **மரபு** | **பாட்டு** | **பத்து** |

______________________________________________

(3 புள்ளி)

ஆ) **வினைமுற்று.** ஓர் எடுத்த்துக்காட்டு எழுதுக.

______________________________________________

(2 புள்ளி)

இ) **முற்றியலுகரம்** என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

______________________________________________

(3 புள்ளி)

21) கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் வந்துள்ள **ஆகுபெயர்** வகையை எழுதுக.

| |
|---|
| நமது பூப்பந்தாட்ட வீரர்கள் உலகக் கிண்ண போட்டியில் வெற்றி வாகை சூடியதைக் கண்டு **நாடே** மகிழ்ந்தது. |

______________________________________________

(2 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.
[பத்தியை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தற்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்.]

| |
|---|
| குமரப்பன் முதலாம் படிவ மாணவன். வேந்தன் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டுத் தீய நண்பர்களுடன் நட்பு பாராட்டி வந்தான். குமரப்பன் அவ்வப்பொலுது வேந்தனுடன் விளையாடுவது வழக்கம். குமரப்பன் வேந்தனுடன் விளையாடுவதை அவன் பெற்றோர் விரும்பவில்லை. பலமுறை அவர்கள் வேந்தனுடன் சேற வேண்டாம் என்றுக் கூறியும் அவன் அவர்கள் பேச்சைக் கேட்கவில்லை. |

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளி)

## பயிற்சி 2

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

**அ) சேர்த்து எழுதுக.**

i. பேசா + பையன் = ____________________
ii. பாடா + பாட்டு = ____________________
iii. ஓடா + குதிரை = ____________________

(3 புள்ளி)

**ஆ) பிரித்து எழுதுக.**

iv. செங்கோல் = ____________________
v. அறவினை = ____________________

(2 புள்ளி)

21. (அ) **பகுப்பதம்** என்றால் என்ன? **ஓர் எடுத்துக்காட்டு** எழுதுக.

____________________________________________________________

(3 புள்ளி)

ஆ) கீழ்காண்பவற்றுள் **செய்தி வாக்கியம்** இரண்டினைத் தெரிவு செய்க

i. உன் செல்வம் அழிந்து போகட்டும்!
ii. ஆசிரியர் திருக்குறளை விளக்கிப் பேசினார்.
iii. ஆகா! இந்த ஊர் அழகாக உள்ளது!
iv. கிளி பழத்தைக் கொத்தித் தின்னும்.

(2 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

| |
|---|
| தம் இல்லத்திற்கு வருகை புரிந்துள்ள விருந்தினருக்கு முதலில் உணவிட்டு, பின்பு தாமுண்டு மகிழ்வதை நம் முன்னோர் வழக்கமாக கொண்டிருந்தனர். விருந்தினர், மூத்தோர், பசு, பறவை, குழந்தைகள் ஆகியோருக்கு உணவளித்த பிறகே தாம் உணவு உண்டு மகிழும் கொள்கையைத் தமிழர்கள் கடைப்பிடித்தனர். விருந்தினருக்கு ஓர் வகை உணவும் தமக்கு அதனிலும் சிறந்த உணவையும் தரம் பிரித்துப் படைத்து உண்பது கூடாதென்றும் நம் மக்கள் கருதின. ஆகவே, ‘மருந்தே ஆயினும் விருந்தோடு உன்’ எனும் முதுமொழிக்கேற்ப விருந்தினரோடு அமர்ந்து உண்ணும் பழக்கத்தை கைக்கொண்டனர். |

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

(10 புள்ளி)

## பயிற்சி 3

20) அ) கீழ்க்காணும் சொல்லின் **காலம், திணை, எண், இடம், பால்** ஆகியவற்றை எழுதுக.

**சென்றன**

______________________________________________

(5 புள்ளி)

ஆ) **இரண்டாம் வேற்றுமை உருபை** ஏற்று வரும் வாக்கியம் ஒன்றை எழுதுக.

______________________________________________

(2 புள்ளி)

21) கீழ்க்காணும் உடன்பாட்டுவினை வாக்கியத்தை **எதிர்மறைவினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

**நிறைமதி சந்தைக்குச் செல்வாள்.**

______________________________________________

(3 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

கடையெழு வள்ளல்களில் முதன்மையாக கருதப்படுகின்ற பாரி பறம்பு மலையை ஆண்ட மன்னன். பறம்பு மலை வலமிக்க மலையாக விளங்கியது. அழகிய நீரோடைகள், அருவிகள், சுவையான கணிகள் தரும் மரங்கள் என எங்கும் இயற்கையின் பங்களிப்பு விரிந்து கிடந்தது. கொடை மனம் கொண்ட வள்ளலான பாரி, எவர்க்கும் எப்பொழுதும் எதையும் தரலாம் என்னும் கொடை நெஞ்சம் உடையவன். பாரி கல்வியில் சிறந்தவன். தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் ஆவல் கொண்டவன். பாணர், விரலியர், புலவர், கூத்தர் எனத் தன்னை நாடி வந்தவர்களுக்கு தன்னுடைய முன்னூறு ஊர்களையும் பரிசிலாகக் கொடுத்துவிட்டு அவன் பறம்பு மலையை மட்டும் ஆண்டு வந்தான்.

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளி)

## பயிற்சி 4

20) கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

அ) **அடை** என்றால் என்ன? அவற்றின் வகையினை எடுத்துக்காட்டுடன் எழுதுக?

______________________________________________

(3 புள்ளி)

ஆ) **வினைத்தொகை** என்பதற்கு மூன்று எடுத்துக்காட்டுகள் எழுதுக.

______________________________________________

(3 புள்ளி)

21) கீழ்க்காணும் சொற்குவியலில் அமைந்துள்ள **பெயரெச்ச வினையெச்ச** சொற்களை வகைப்படுத்துக.

| | |
|---|---|
| **ஓடிய பையன்** | **படித்து முடித்தான்** |
| **போய்ப் பார்த்தான்** | **பாடிய பாடல்** |

______________________________________________

______________________________________________

(4 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

> மகிழ்மதி கூர்மதி மிக்கவள். ஒவ்வொரு நாலும் காலையிலே துயிலெழுந்தவுடன் இறைவனை வணங்குவாள்; கடிதவம் மேற்கொல்வாள். காலையுணவுக்கு பிறகு கடிமனையைச் சுத்தம் செய்வாள். தொடர்ந்து, நனிபசுக்களின் உறைவிடமான தொழுவத்தை கூட்டிப் பெறுக்குவாள். கழிநடை மங்கையை அவளின் பெற்றோர் என்றென்றும் புகழ்பெற்று நீடூழி வாழ வாழ்த்துவர்.

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளி)

## பயிற்சி 5

20) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

அ) **சேர்த்து எழுதுக.**

i. முழு + பாடல் = ________________
ii. நடு + தெரு = ________________
iii. அவை + படகுகள் = ________________

(3 புள்ளி)

ஆ) **பிரித்து எழுதுக**.

i. மேனாடு = ________________
ii. கீழ்த்திசை = ________________
iii. வடகிழக்கு = ________________

(3 புள்ளி)

21) அ) கொடுக்கப்பட்டுள்ள செயப்பாட்டுவினை வாக்கியத்தைச் **செய்வினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

நாட்டுப்பற்று நாடகக் கலைஞர்களால் வளர்க்கப்பட்டது.

______________________________________________

ஆ) கீழ்க்காணும் தன்வினை வாக்கியத்தைப் **பிறவினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

யுவராணி தேவாரம் பாடினாள்.

______________________________________________

(4 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

| |
|---|
| தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் தொடர் நாடகங்கள் பல்வேறு நன்மையைக் கொண்டு வருகின்றன என்றால் மிகையாகா. பரபரப்பு மிக்க இன்றைய காலத்தில் நூல் வாசிப்பு அறுகி வருகின்றது. இதனால் இலக்கிய, இதிகாச நூல்களின் சாரத்தை இளைய தலைமுறையினர் நுகர முடியாமல் போகிறது. இக்குறையை தொடர் நாடகங்கள் கலைகின்றன. தொலைக்காட்சியிலும் வலையொளிகளிலும் ஒளிபரப்பப்படும் இலக்கிய, இதிகாச நாடங்கள் மிகவும் பிரமாண்டமான முறையில் காட்சிகளைக் கண்முன்னே கொண்டு வந்துப் பலரையும் ஈர்த்து வருகின்றன. |

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளி)

## பயிற்சி 6

20. அ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களை **அகவினா புறவினா** எனப் பிரித்து வகைப்படுத்துக.

| **யாது** | **கள்வனோ** |
|---|---|

_______________________________________________

(2 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் சொற்கள் ஏற்று வந்துள்ள **வேற்றுமை உருபுகளை** அடையாளங்கண்டு எழுதுக.

i) ஆற்றில் - ____________________

ii) மரத்தால் - ____________________

(2 புள்ளி)

21) அ) கீழ்க்காணும் சொற்களின் **தொகை** வகையை எழுதுக.

i. செடிகொடி - ____________________

ii. முத்துப்பல் - ____________________

iii. செய்தொழில் - ____________________

iv. நீல வானம் - ____________________

(4 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் நேர்க்கூற்று வாக்கியத்தை அயற்கூற்று வாக்கியமாக மாற்றி எழுதுக.

**அமைச்சர், "மன்னா! உங்களைக் காண அயல்நாட்டு தூதுவர் காத்திருக்கிறார்," என்றார்.**

_______________________________________________

(2 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

> சகோதரர்களே,
>
> நாம் குடியிருக்கும் இப்பகுதியில் ஓர் பொது மண்டபம் எழுப்புவது நம் அனைவரின் கணவாக இருந்தது. அது நனவாகும் நேரம் வந்துவிட்டது. ஆம், நண்பர்களே! வெகுவிரைவில் இப்பகுதியில் பன்னோக்குப் பொது மண்டபம் கட்டுவதற்கான ஆயத்தப் பனிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இம்மண்டபம் கட்டும் முழுச் சௌளவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். இம்மண்டபத்திற்கு வெலிப்புறத்தில் உள்ள பகுதியை அழகாக மாற்றுவது நம் அனைவரின் கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

_______________________________________________

_______________________________________________

(10 புள்ளி)

## பயிற்சி 7

20) அ) கீழ்க்காணும் வாக்கியத்தில் **அகவினாச்** சொல்லைத் தெரிவு செய்க

| |
|---|
| <u>ஏன்</u> <u>அவன்</u> <u>பள்ளிக்கு</u> <u>வரவில்லை</u>? |
| **A** **B** **C** **D** |

(2 புள்ளி)

ஆ) **கடைப்போலி** என்றால் என்ன என்பதை ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

______________________________

(3 புள்ளி)

21) அ) கீழ்க்காணும் வாக்கியங்களில் காணப்படும் **வேற்றுமைத்தொகையை** அடையாளங்கண்டு எழுதுக.

i. கபிலனும் கதிரவனும் பழம் பறிப்பதற்காக மரம் ஏறினார்கள்

ii. அவன் பள்ளி அளவிலான போட்டியில் கவிதை எழுதி முதல் பரிசு வென்றான்

______________________________

(3 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

| |
|---|
| வாழ்க வலத்துடன் என்று வாழ்த்துவதை நாம் செவிமடுத்திருக்கிறோம். வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று வாழ வேண்டுமென்பதே இக்கூற்றின் பொருளாகும். ஆண்டவனின் படைப்பில் கிடைத்ததற்கறிய பேறாகக் கருதப்படுவது மக்கட்பிறவியாகும். இப்பிறவியில் அனைத்துப் பேறுகளையும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டுமென்பதே ஒவ்வொருவரின் குறிக்கோளாகும். ஆனால், வாழுங்காலத்து நிகழ்கின்ற மாற்றங்கலினால் இப்பேறுகளைப் பெறும் வழிகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றது. அவ்வழிகளில் சில நன்மைக்கு இட்டு செல்கின்றன; வேறு சில தீமைக்கு இட்டுச் செல்கின்றன. |

______________________________

______________________________

______________________________

(10 புள்ளி)

## பயிற்சி 8

20) அ) **வந்தனர்** என்னும் சொல்லின் **காலம், திணை, எண், இடம் பால்** ஆகியவற்றை எழுதுக.

______________________________________________

(5 புள்ளி)

**ஆ) சேர்த்து எழுதுக**

i. ஆறு + பத்து = ______________________

ii. விலை + அதிகம் = ______________________

(2 புள்ளி)

21) கீழ்க்காணும் நேர்கூற்று வாக்கியத்தை **அயற்கூற்று வாக்கியமாக** மாற்றி எழுதுக.

| |
|---|
| ஆசிரியர், “ மாணவர்களே, நாளை அனைவரும் பள்ளிக்குக் கண்டிப்பாக வாருங்கள்,” என்றார் |

______________________________________________

(3 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

| |
|---|
| மக்களின் உழைப்பு மட்டும் நாட்டை முன்னேற்றிவிடும் என்றுக் கூறுவது பகற்கனவு கான்பதற்கு ஒப்பாகும். நாட்டின் முன்னேற்றம் என்பது மாபெரும் திட்டங்களை தீட்டிச் செயல்படுத்துவதில் அடங்காது. நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றமாக அது இருக்க வேண்டும். இன்று எல்லா நாடுகளிலும் மக்கள் உளைக்கிறார்கள். ஆனால், எல்லா நாடுகளும் அந்த உழைப்பினால் முன்னேறி இருக்கின்றது என்று கூற முடியாது. |

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளி)

## பயிற்சி 9

20) அ) கொடுக்கப்பட்டுள்ள **குற்றியலுகரச் சொற்களின்** வகையை எழுதுக.

| | | |
|---|---|---|
| **பங்கு** | **வீழ்து** | **பாகு** |

(3 புள்ளி)

ஆ) **யகர உடம்படு மெய்** என்றால் என்ன என்பதை ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(2 புள்ளி)

21) அ) வாக்கியங்களில் காணப்படும் **திசைச்சொல்லை** அடையாளங்கண்டு எழுதுக.

i. அம்மா துணிகளை மடித்து அலமாரியில் அடுக்கி வைத்தார்.
ii. அப்பா எனக்கு பத்து பென்சில்களை வாங்கிக் கொடுத்தார்.
iii. ஆபத்து அவசர நேரங்களில் நாம் மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.

(3 புள்ளி)

ஆ) பிறவினை வாக்கியத்தை **தன்வினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

**கம்பர் கவிதை எழுதுவித்தார்**

(2 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

சமயமே மனிதனைப் பன்படுத்துகிறது. எனவேதான், சமயக் கல்வியும் அறிவும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமாகிறது. தமிழை படிப்பதனால் மட்டுமே தமிழில் உள்ள சமய நூல்களை படித்துணர முடியும். திருமுறை போன்ற சமய நூல்கள் பலவும் தமிழில்தான் தோன்றியது. தமிழ் இல்லாவிட்டால் நம் சமயத்தின் உண்மைத் தத்துவங்களை அரிந்துக்கொள்ள இயலாது. தமிழச் சமுதாயம் பண்பாடு, கலை, கலாச்சாரம், பாரம்பரியம் கொண்ட செம்மையான சமுதாயமாகும்.

(10 புள்ளி)

## பயிற்சி 10

20. **அ) சேர்த்து எழுதுக**

i. வந்து + சென்றான் = ______________________

ii. பொன் + தகடு = ______________________

iii. தை + திங்கள் = ______________________

iv. மா + இலை = ______________________

v. வாழை + பழம் = ______________________

(5 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்

i. **தற்பவம்** என்றால் என்ன?

______________________________________________

(1 புள்ளி)

ii. அதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

______________________________________________

(1 புள்ளி)

21) **இரண்டாம் வேற்றுமைக்குப் பின் வலிமிகும்**. இவ்விதிக்கு ஏற்ப **இரண்டு** எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________________________

(3 புள்ளி)

22) கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைத் **திருத்தி** எழுதுக.

சிறுவன் : சுறுசுறுப்பாய் எங்கும் நீ
சுற்றுவ தேனோ எறும்பே சொல்?
எறும்பு : கரும்பும் சீனியும் கற்கண்டும்
விரும்பித் தேடி போகின்றேன்.
சிறுவன் : மண்ணில் வாளும் எறும்பே நீ
மனிதனுக் கென்ன கூறுகிறாய்?
எறும்பு : என்னை போல மனிதா நீ
என்றும் நன்றாய் உலைத்திடுவாய்!

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளி)

# விடைப்பட்டி

**பயிற்சி 1**

| கேள்வி | விடை |
|---|---|
| **20.** | அ) எருது, உலகு, மரபு |
| | ஆ) வாசிப்பாள்<br>(ஏற்புடைய வேறு பதில்கள்) |
| | இ) தனிக்குறிலுக்குப் பிறகு உகரங்கள் வந்து முழுமையாக ஒலிப்பது முற்றியலுகரமாகும்.<br>எடுத்துக்காட்டு : நடு, விடு, கொடு |
| **21.** | இடவாகு பெயர் |
| **22.** | i. படிப்பை - படிப்பைப்<br>ii. நட்பு - நட்புப்<br>iii. இவ்வப்பொலுது - அவ்வப்பொழுது<br>iv. என்றுக் – என்று<br>v. சேற - சேர |

**பயிற்சி 2**

| கேள்வி | விடை |
|---|---|
| **20.** | அ)<br>i. பேசாப்பையன்<br>i. பாடாப்பாட்டு<br>ii. ஓடாக்குதிரை<br>ஆ)<br>i. செம்மை + கோல்<br>ii. அறம் + வினை |
| **21.** | அ)<br>பகுக்கக் கூடிய அல்லது பிரிக்கக் கூடிய சொல் பகுப்பதம் ஆகும். அவ்வாரு பிரித்து எழுதுகையில் தனித்து நின்று பொருள் அளிக்கும் இயல்புடையது.<br><br>எடுத்துக்காட்டு : அறிவான், கல்வி |
| | ஆ) ii, iv |
| 22. | i. வழக்கமாக - வழக்கமாகக்<br>ii. ஓர் - ஒரு<br>iii. கருதின - கருதினர்<br>iv. உன் - உண்<br>v. பழக்கத்தை - பழக்கத்தைக் |

**பயிற்சி 3**

| கேள்வி | விடை |
|---|---|
| **20.** | அ)<br>காலம் : இறந்தகாலம்<br>திணை : அஃறிணை<br>எண் :பன்மை<br>இடம் : படர்க்கை<br>பால் : பலவின்பால்<br><br>ஆ) நான் தினமும் **இறைவனை** வழிபடுவேன்<br>(ஏற்புடைய வேறு பதில்கள்) |
| **21.** | i. நிறைமதி சந்தைக்குச் **செல்லாள்/ செல்லமாட்டாள்.** |
| **22.** | i. முதன்மையாகக் - முதன்மையாகக்<br>ii. வலமிக்க - வளமிக்க<br>iii. கணிகள் - கனிகள்<br>iv. வந்தவர்களுக்கு - வந்தவர்களுக்குத்<br>v. முன்னூறு – முந்நூறு |

**பயிற்சி 4**

| கேள்வி | விடை |
|---|---|
| 20. | அ) சொல்லின் தன்மையை அல்லது இயல்பை விளக்குவது அடையாகும். அடை பெயரடை வினையடை என இருவகைப்படும்.<br>எடுத்துக்காட்டு : அழகான குழந்தை (பெயரடை)<br>: வேகமாக ஓடினாள் (வினையடை)<br><br>ஆ) புதைகுழி, சுடுமணல், அலைகடல் |
| 21. | பெயரெச்சம் : ஓடிய பையன்<br>: பாடிய பாடல்<br>வினையெச்சம் : போய்ப் பார்த்தான்<br>: படித்து முடித்தான் |
| 22. | i. நாலும் - நாளும்<br>ii. மேற்கொல்வாள் - மேற்கொள்வாள்<br>iii. காலையுணவுக்கு - காலையுணவுக்குப்<br>iv. தொழுவத்தை – தொழுவத்தைக்<br>v. பெறுக்குவாள் - பெருக்குவாள் |

**பயிற்சி 5**

| கேள்வி | விடை |
|---|---|
| 20. | அ) **சேர்த்து எழுதுக.**<br>I. முழுப்பாடல்<br>II. நடுத்தெரு<br>III. அவை படகுகள்<br><br>ஆ) **பிரித்து எழுதுக.**<br>I. மேற்கு + நாடு<br>II. கீழக்கு + திசை<br>III. வடக்கு + கிழக்கு |
| 21. | அ) நாடகக் கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தனர்.<br><br>ஆ) யுவராணி தேவாரம் பாடுவித்தாள் |
| 22. | நன்மையைக் - நன்மைகளைக்<br>அருகி - அறுகி<br>இக்குறையை – இக்குறையைத்<br>கலைகின்றன – களைகின்றன<br>வந்துப் – வந்து |

**பயிற்சி 6**

| கேள்வி | விடை |
|---|---|
| **20.** | அ)<br>அகவினா: யாது<br>புறவினா: கள்வனோ<br><br>ஆ) ஒரு பொருளுக்கு அதன் தன்மை, குணம், செயல் அடிப்படையில் காரணத்துடன் வழங்கப்பட்ட பெயர்சொல் காரணப்பெயராகும்.<br><br>எடுத்துக்காட்டு : நாற்காலி, பறவை<br>(ஏற்புடைய வேறு பதில்கள்) |
| **21.** | அ)<br>i. உம்மைத்தொகை<br>ii. உவமைத்தொகை<br>iii. வினைத்தொகை<br>iv. பண்புத்தொகை<br><br>ஆ)<br>மன்னனிடம் அவரைக் காண அயல்நாட்டுத் தூதர் காத்திருப்பதாக அமைச்சர் கூறினார். |
| **22.** | i. ஓர் - ஒரு<br>ii. கணவாக - கனவாக<br>iii. பனிகள் - பணிகள்<br>iv. சௌவையும் - செலவையும்<br>v. வெலிப்புறத்தில் - வெளிப்புறத்தில் |

**பயிற்சி 7**

| கேள்வி | விடை |
|---|---|
| **20**. | அ) A<br><br>ஆ) ஒரு சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேரோர் எழுத்து அமைந்து அதே பொருளைத் உணர்த்துமாயின் அது கடைப்போலி எனப்படும்.<br><br>எடுத்துக்காட்டாக:<br>அற**ம்**- அற**ன்**<br>குட**ல்** –குட**ர்.**<br><br>மேற்காணும் எடுத்துக்காட்டில் மகரத்திற்கு னகரமும், லகரத்திற்கு ரகரமும் போலியாக வந்துள்ளது. |
| **21.** | அ)<br>i. மரம்- மரத்**தில்** (5-ஆம் வேற்றுமைத் தொகை)<br>ii. கவிதை- கவிதை**யை** (2-ஆம் வேற்றுமைத் தொகை)<br>iii. தமிழ்த்தொண்டு- தமிழுக்**குத்** தொண்டு (4-ஆம் வேற்றுமைத் தொகை) |
| **22.** | i. வலத்துடன் - வளத்துடன்<br>ii. கிடைத்தற்கறிய - கிடைத்ததற்கரிய<br>iii. மாற்றங்கலினால் - மாற்றங்களினால்<br>iv. ஏற்படுகின்றது - ஏற்படுகின்றன<br>v. இட்டு – இட்டுச் |

**பயிற்சி 8**

| கேள்வி | விடை |
|---|---|
| **20**. | அ)<br>காலம் – இறந்தகாலம்<br>திணை – உயர்திணை<br>எண் – பன்மை<br>இடம் – பர்க்கை<br>பால் – பலர்பால்<br><br>ஆ)<br>i. அறுபது<br>ii. விலையதிகம் |
| **21.** | மாணவர்கள் அனைவரையும் மறுநாள் பள்ளிக்குக் கண்டிப்பாக வரும்படி ஆசிரியர் கூறினார். |
| **22.** | i. என்றுக் - என்று<br>ii. திட்டங்களை - திட்டங்களைத்<br>iii. அது - அஃது<br>iv. உளைக்கிறார்கள் - உழைக்கிறார்கள்<br>v. இருக்கின்றது - இருக்கின்றன |

**பயிற்சி 9**

| கேள்வி | விடை |
|---|---|
| **20.** | அ)<br>பங்கு – மென்தொடர்க்குற்றியலுகரம்<br>வீழ்து - இடைத்தொடர்க்குற்றியலுகரம்<br>பாகு - நெடில்தொடர்க்குற்றியலுகரம்<br><br>ஆ) நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ முதலிய உயிர் எழுத்துகள் வந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'வ'கரம் தோன்றும்<br>எடுத்துக்காட்டு : காலையுணவு, கூலியாள் |
| **21.** | அ)<br>i. அலமாரி<br>ii. பென்சில்<br>iii. ஆபத்து<br><br>ஆ) கம்பர் கவிதை எழுதினார் |
| **22.** | i. பன்படுத்துகிறது – பண்படுத்துகிறது<br>ii. தமிழை - தமிழைப்<br>iii. நூல்களை – நூல்களைப்<br>iv. தோன்றியது- தோன்றின<br>v. அரிந்துகொள்ள - அறிந்துக்கொள்ள |

**பயிற்சி 10**

| கேள்வி | விடை |
|---|---|
| **20.** | அ)<br>i. வந்து சென்றான்<br>ii. பொற்றகடு<br>iii. தைத்திங்கள்<br>iv. மாவிலை<br>v. வாழைப்பழம்<br><br>ஆ)<br>i. வடமொழிக்குரிய சிறப்பெழுத்துகளாலும் இரு மொழிக்குரிய பொது எழுத்துகளாலும் அமைந்த வட்சொல் தற்பவம் ஆகும்.<br>ii. ஹனுமன் – அனுமன்<br>வருஷம்- வருடம் |
| **21.** | i. கையைத் தட்டு<br>ii. இராமனைப் பார்<br>(பிற ஏற்புடைய பதில்கள்) |
| **22.** | i. சீணியும் - சீனியும்<br>ii. தேடி - தேடிப்<br>iii. வாளும் - வாழும்<br>iv. என்னை - என்னைப்<br>v. உலைத்திடுவாய் - உழைத்திடுவாய் |